செய்தி வெளியீடு எண்: 081 நாள்: 31.01.2018

இன்று (31.01.2018) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நிதிநிலை பற்றிய ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேயிலைத் தோட்டக் கழகத்தின் தற்போதைய வருவாய் – செலவின விவரங்கள், தேயிலை உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை உயர்த்துவது குறித்தும், நிறுவனத்தை இலாபகரமாக செயல்பட வைப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் நலன் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) முனைவர் ஹி.பசவராஜு, இ.வ.ப., அவர்கள், தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகத் தலைவர் திரு.அசோக்உப்ரேதி, இ.வ.ப., அவர்கள் ராஜ்யசபா உறுப்பினர் திரு.அர்ஜுனன் அவர்கள், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.ராமு அவர்கள், முன்னாள் அமைச்சர் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஆவின் இணையத்தலைவர் திரு.மில்லர் அவர்கள், தொழிலாளர் நலத்துறை கூடுதல் ஆணையர் திரு.பாலசுப்பிரமணியன், அவர்கள் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழக அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் திரு.ஜெயராமன் மற்றும் வனத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9